2010 ஏப்ரல் 22]

இணைப்பு II

(422 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை

அறிவிப்புகள், 2010–2011

(1) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி கடந்த ஆண்டில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட திருவெறும்பூர், குறிஞ்சிப்பாடி, குத்தாலம், கடலூர், மாதவரம், மடத்துக்குளம், ஆம்பூர், சோழிங்கநல்லூர் மற்றும் ஆலந்தூர் ஆகிய 9 வட்டாட்சியர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

(2) கடந்த ஆண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்ட உடுமலைப்பேட்டை மற்றும் தாம்பரம் வருவாய்க் கோட்டங்களுக்கு புதிய வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் கட்டித் தரப்படும்.

(3) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் மற்றும் தென்காசி வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு பழைய கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

(4) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் பழைய கட்டடத்திற்குப் பதிலாக புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

(5) திண்டுக்கல் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு பழைய கட்டடத்திற்குப் பதிலாக புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

(6) தற்பொழுது நாடெங்கும் மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணிகள் துவக்கப்பட்டுள்ள காரணத்தால் 31-3-2011 வரை புதிதாக மாவட்டங்கள், கோட்டங்கள் வட்டங்கள், கிராமங்கள் உள்ளிட்ட நிருவாகப் பிரிவு எதையும் ஏற்படுத்த தடையாணை உள்ளது. எனினும், பொது மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இத்தடையாணை நீங்கிய பிறகு, இராமநாதபுரம் மாவட்டத்தில்,

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 22

கீழக்கரையை தலைமையிடமாகக் கொண்டு புதிய கீழக்கரை வட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தில், திருவோணத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய திருவோணம் வட்டம், நாமக்கல் மாவட்டத்தில், செம்மேட்டைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கொல்லிமலை வட்டம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் அன்னூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய அன்னூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில், கீழ்ப்பெண்ணாத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கீழ்ப்பெண்ணாத்தூர் வட்டம் ஆகிய *5* புதிய வட்டங்களை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(7) தூத்துக்குடி மாவட்டத்தில், சாத்தான்குளம் மற்றும் திருச்செந்தூர் வருவாய் ஆய்வாளர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டித்தரப்படும்.

(8) கரூர் மாவட்டத்தில், குளித்தலை வருவாய் ஆய்வாளருக்கு பழுதடைந்த கட்டடத்திற்குப் பதிலாக புதிய குடியிருப்பு கட்டித் தரப்படும்.

(9) நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறையின் மூலமாக *100* வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ரூ. *75.89* இலட்சம் செலவில் *6* கே.வி.ஏ. திறன் கொண்ட தடையில்லா மின்வழங்கு (UPS) சாதனங்கள் வாங்கப்படும்.

(10) எழிலகம் அலுவலக வளாகத்தில் ரூ.*50.00* இலட்சம் செலவில் சீருந்து நிறுத்துமிடம் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கப்படும்.

(11) நில நிருவாக ஆணையர் அலுவலகத்தில் அனைத்துப் பிரிவுகள் மற்றும் அலுவலர்களுக்கு ரூ. *30.00* இலட்சம் செலவில் நவீன முறையில் தடுப்பு அறைகள் (Cubicle System) அமைத்துத் தரப்படும்.

(12) நில அளவை மற்றும் நில வரித் திட்ட ஆணையாளர் அலுவலகத்திற்கு ரூ. *32.15* இலட்சம் செலவில் ஒரு புதிய மின்தூக்கி, ஒரு மின் உற்பத்தி சாதனம் மற்றும் நகலெடுக்கும் கருவி ஆகியன வாங்கப்படும்.

2010 ஏப்ரல் 22]

(13) நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நில வரித் துறைக்கு ரூ.*7.50* இலட்சம் செலவில் கணினிகள், கணினி மேசைகள், நாற்காலிகள் மற்றும் அலமாரிகள் வாங்கப்படும்.

(14) நில அளவை மற்றும் நில வரித் திட்டத் துறையில் ஏற்கெனவே உள்ள பழைய சீருந்து மற்றும் பழைய ஈப்புக்குப் பதிலாக ரூ. *9.96* இலட்சம் செலவில் ஒரு புதிய சீருந்து மற்றும் ஒரு புதிய ஈப்பு வாங்கப்படும்.

(15) நில நிருவாக ஆணையர் அலுவலகத்தில் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள பழைய சீருந்துக்குப் பதிலாக ரூ.*5.20* இலட்சம் செலவில் புதிய சீருந்து வாங்கப்படும்.

(16) நில நிருவாக ஆணையர் அலுவலகத்திற்கு ரூ.*9.50* இலட்சம் செலவில் அகத்தொலைபேசிகள், அலமாரிகள் மற்றும் வரைபட அச்சுப்பொறி (Map Printer) ஆகியவை வாங்கப்படும்.

(17) நிலச் சீர்திருத்தத் துறைக்கு ரூ. *1.65* இலட்சம் செலவில் *15* அலமாரிகள் வாங்கப்படும்.

(18) நில நிருவாக ஆணையர் அலுவலகத்திற்கு ரூ.*3.30* இலட்சம் செலவில் நிகரி இயந்திரங்கள் (Fax) மற்றும் நகல் எடுக்கும் இயந்திரங்கள் வாங்கப்படும்.

(19) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்ட அலுவலகத்தில் பொது மக்கள் பயன்படுத்துவதற்காக ரூ. *7.35* இலட்சம் செலவில் கழிவறை கட்டப்படும். மேலும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டப்படும்.

(20) கடலூர் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் ரூ. *4.64* இலட்சம் செலவில் *15* கே.வி.ஏ. திறன் கொண்ட டீசல் மின் உற்பத்தி சாதனம் மற்றும் மின்குழாய்த் தொடர்கள் அமைக்கப்படும்.

(21) தலைமைச் செயலக வருவாய்த் துறை பணிகளை மேம்படுத்த ரூ.*10.95* இலட்சம் செலவில் மின்னணு அச்சுப்பொறிகள், லேசர் அச்சுப் பொறிகள், நிகரி இயந்திரங்கள் முதலிய உபகரணங்கள் வாங்கப்படும்.